REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 16உ செவ்வாய் (31—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 17உ புதன் (1—1—58) [இதழ் 171

தமிழில் சர்க்கார் கடிதப் போக்கு-வரத்து

1,750 அலுவலகங்களில் சன. 14 முதல் அமுலாகுமாம்

சென்னை, டிச. 31—

பொங்கல் நாளன்று அதாவது சனவரி 14-ந் தேதியன்று தமிழ் நாட்டில் உள்ள அரசாங்கத்தைச் சேர்ந்த 1,750 சிறிய அலுவலகங்களில் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவரச் சென்னை அரசு முடிவு செய்திருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்

"சட்ட மன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்ட கருத்து அதுவேயாகும்"

"இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கு சம்மதம் தரச்சொல்லி என்னை அழைக்கவும் இல்லை; நான் சம்மதம் தரவும் இல்லை"

திரித்துக்கூறப்படும் பத்திரிகைச்செய்தியை மறுத்து அண்ணா தரும் விளக்கம்

★

நானும், எதிர்க் கட்சியினர் வேறு சிலரும் கலந்து கொண்ட மொழி ஆய்வுக் கமிட்டியில், இந்தி ஆட்சி மொழியாவதற்கு நான் சம்மதம் அளித்ததாகத் தெரிவிக்கும் பத்திரிகைச் செய்திகள் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

தப்பர்த்தம் தரக்கூடிய வகையில் அமைந்துள்ள அத்தகைய அறிக்கைகளால் தவறான எண்ணங்கள் எழக்கூடுமாகையால், இந்தி ஆட்சிமொழி ஆவதற்கு நான் சம்மதம் அளித்துவிட்டேன் என்ற கூற்றினை, இதன் மூலம் மறுக்கிறேன்

உண்மையைக் கவனிக்குமிடத்து, அந்தக் கமிட்டி, இந்தி ஆட்சி மொழியாக இருக்கலாமா என்பது பற்றி விவாதித்து முடிவு எடுக்கக் கூட்டப்பட்டதல்ல.

1965-ல், ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதற்கான வழிவகைகளை எடுத்துக்கூறும் கேர் கமிட்டி அறிக்கைபற்றி, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காருக்கு தமது கருத்தைத் தெரிவிக்க விரும்பினார்.

இந்த அம்சத்தைக் கவனித்து, பலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஒரு யோசனையைக் காணவே, கமிட்டி கூட்டப்பட்டது—இந்தி ஆட்சிமொழி ஆக இருப்பதா என்பதுபற்றி எமது கருத்தினை அறியவோ, ஆதரவு பெறவோ அல்ல.

அரசியல் சட்டத்தில், இந்தி ஆட்சிமொழி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது; சட்டத்தின்படி கிடைத்துள்ள இந்த நிலைமையை, நடைமுறைக்கு எப்படிக் கொண்டுவருவது என்பதுதான் கேர் கமிட்டியினரின் அறிக்கையின் சாரமாகும்.

அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர்கள், இந்தியை ஆட்சி மொழி அந்தஸ்துள்ளதாக செய்தது மாபெரும் தவறு என்று கருதியும், கூறியும், இந்தியைத் திணிக்கும் முயற்யை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தும், அரசியல் சட்டத்திலேயே பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தியும் வருகிற ஒரு கட்சியைச் சார்ந்தவன் நான.

நான் கமிட்டிக்கு அழைக்கப்பட்டது, இந்த, என்னுடைய கட்சியின் கொள்கையைவிட்டுக் கொடுத்துவிடவோ, அல்லது அதைக் கவனியாமல் இருந்துவிடவோ, அல்ல.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்து கருத்து அறியவே எங்கள் உதவி நாடப்பட்டது. பல்வேறு கட்சியினர், வெவ்வேறான பல கருத்துக்களை, விவாதித்தான பிறகு,

ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் ஆட்சிமொழியாக இருந்துவரவேண்டும் என்றும்;

இதற்கான முறையிலே பார்லிமெண்டு சட்ட—சம்மதம் தர வேண்டும் என்றும்—

இதனை எப்பொழுது மாற்றுவதாக இருப்பினும், மாநில சட்டசபையின் சம்மதம் பெற்றாக வேண்டும் என்றும்

இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறும் திட்டத்தைச் சென்னை சர்க்கார் தீட்டிற்று.

எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்ட காலம் (prolonged period) ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்துக்குச் சம்மதம் தெரிவித்தன. இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு நான் சம்மதம் அளிக்கவில்லை. அதிலே பொருத்தமும் இல்லை; ஏனெனில், அரசியல் சட்டம் இந்தியை ஆட்சி மொழி என்று குறிப்பிட்டிருக்கிறது; என் கட்சியும், வேறு சில கட்சிகளும் (இந்தி ஆட்சி மொழி என்று சட்டம் கூறுவதை) எதிர்த்துக் கிளர்ச்சி செய்து கொண்டுவருகின்றன.

கமிட்டியில், ஒன்றுக்கொன்று மிக வேறுபட்ட கருத்து கொண்ட கட்சிகளெல்லாம் இருந்தன. 'ஆங்கிலத்தை அகற்றியே தீரவேண்டும்—இந்தியைப் புகுத்தியே ஆக வேண்டும்' என்று உறுதியாகக் கூறிடும் பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியும் இருந்தது; 'இந்தி எந்த முறையிலும், வடிவிலும் புகலாகாது' என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நானும் இருந்தேன். உடனடியாக வர இருக்கும் விபத்து குறித்து எங்கள் கருத்து அறிய விழைந்தனர்; அனைவரும் ஆங்கிலம் தொடர்ந்து நீண்ட காலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதற்குச் சம்மதம் அளித்தோம்.

தத்தமது கட்சியின் கருத்துக்களைக் கொண்ட—மாறுபாடான கருத்து கொண்ட

★★★★★★★★★★★★★★★★★★

நாளை!

கருப்புக்கொடி காட்ட அண்ணாவின் அழைப்பு, பொதுச் செயலாளர் அவர்களின் வேண்டுகோள் ஆகியவை நாளை சென்னை 1—1—58 (வெளியூர் 2—1—58) 'நம் நாடு' இதழில் வெளிவரும்.

இதழ்கள், சென்னை நகரில் காலையிலேயே கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (ஆ-ர்)

★★★★★★★★★★★★★★★★★★

அறிக்கைகளையும் சர்க்கார் அறிக்கையுடன் இணைத்து அனுப்பலாமா என்று கேட்டபோது, கனம சுப்பிரமணியம் அவர்கள், 'எந்தக் கட்சியும் அதனுடைய கொள்கையை விட்டுவிட்டதாக எண்ணத் தேவையில்லை; வர இருக்கும் நெருக்கடியை சமாளிப்பதற்கு—கேர் கமிட்டியின் விளைவுகளைக் கவனிப்பதற்குத்தான் ஒன்றுபட்ட கருத்தை அறிகிறோம்—பெறுகிறோம்' என்று சொன்னார்.

எனவே, எல்லா எதிர்க்கட்சிகளும், ஆங்கிலம் தொடர்ந்து மிக நீண்டகாலம் ஆட்சிமொழியாக இருப்பதற்குச் சம்மதம் அளித்தன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து, திட்டவட்டமாகக் கூறப்பட்டாகிவிட்டது—(1) இந்தி ஆட்சி மொழி என்று தி. மு. க. ஏற்க மறுக்கிறது; (2) தனி அரசு காணவேண்டும் என்று பாடுபட்டு வரும் கழகமாதலால், அந்த அரசு அமையும்போது, 'அகில இந்திய பாஷை' என்ற பேச்சுக்கே, அவசியமோ அர்த்தமோ இல்லை என்று கருதுகிறது.

எனவே, தி. மு. கழகத்தையோ, அதன் சார்பில் என்னையோ அழைத்து, 'இந்தியை அகில இந்திய பாஷை என்று ஏற்கச் சம்மதமா?' என்று கேட்பதிலேயே பொருள் இல்லை.

கேர் கமிஷன் அறிக்கையின் விளைவாகத் தோன்றி, நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை—நெருக்கடியை எவ்விதம் சமாளிப்பது என்பதுதான் கமிட்டியின் முன்பு இருந்த பணி. இதிலேதான் ஒருமித்த கருத்து தேடப்பட்டது; அடிப்படைத் தத்துவங்கள் பற்றி அல்ல.

தி. மு. கழகம் கொண்டுள்ள கொள்கைகளை நான் திட்டவட்டமாகவே தெரிவிக்க விருப்புகிறேன்—(1) இந்தி ஆட்சிமொழியாக இருத்தல் கூடாது; (2) தனித் திராவிடநாடு பெறும் நிலையை எதிர்பார்த்து இருக்கும் நாங்கள், அகில இந்தியாவுக்கு ஒரு ஆட்சிமொழி வேண்டும் என்ற தத்துவத்தையே, பொருளற்றது—தேவையற்றது என்று கருதுகிறோம்.

பத்திரிகையில் வெளிவந்த செய்திகளால், ஏதேனும் தவறான எண்ணம் ஏற்பட்டிருக்குமானால், அதனை நீக்கிட விரும்புகிறேன்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு சம்மதம் தரச் சொல்லி என்னை அழைக்கவும் இல்லை; நான் சம்மதம் தரவும் இல்லை.

கேர் கமிட்டி அறிக்கையின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினை குறித்தே கலந்தாலோசிக்க நேரிட்டது; அதில், அனைவரும், 'ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்' என்று கூறினர்.

இந்த விஷயத்தில்தான் எல்லாக் கட்சிகளும் ஒருமுகமான சம்மதம் அளித்தன.

அந்தந்தக் கட்சியின் அடிப்படைத் தத்துவங்கள், அந்தந்தக் கட்சிகளின் தனி உரிமை. எங்களைக் கலந்தாலோசித்து, எமது சில கருத்துக்களை இணைத்து சென்னை சர்க்கார் ஒரு 'மனு' தயாரித்தனர்; நடந்தது அவ்வளவுதான்.

அது. எல்லாக் கட்சிகளும் கூடித் தயாரித்த அறிக்கை அல்ல.

அதிலே, நாங்கள் கையெழுத்து இடவுமில்லை; அதில் காணப்படும் யாவும் எங்களுக்கு முழுக்க முழுக்க ஒத்தவை என்றும் கூறுவதற்கில்லை.

1965-க்குப் பிறகும். தொடர்ந்து நீண்டகாலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதிலேதான் பொதுவான சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்தி ஆட்சிமொழியாவதற்கு நான் சம்மதம் அளித்தேன் என்று கூறுவது உண்மையை திரித்துக்கூறுவதாகும்.

அண்ணாதுரை

நாஞ்சில் மாநாட்டுத் தீர்மானங்கள்

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விடுதலை செய்து, சாதி ஒழிப்புக்கான வழிவகைகளைக் காண நாட்டின் தலைவர்களும், அரசியலாரும் முன்வரவேண்டுமென்று கூறுவதுடன், இதில் அரசாங்கம் தவறுமானால் நாட்டில் கசப்பும், குரோதமும், வகுப்புக் கிலேசமும்தான் தலைதூக்கி நிற்கும் என, பலாத்காரமின்றி அமைதியான முறையில் சாதிப் பாகுபாடுகளை ஒழிக்கப் பாடுபட்டுவரும் தி. மு. கழகம் அரசியலாருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) பெரியாரின் நோக்கம் சாதி ஒழிப்பு எனும் அவசியமான—அவசரமான கொள்கை என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றலும், அறிந்து கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் அற்ற முறையில் நேரு பண்டிதர் நடந்துகொண்டு, எதேச்சாதிகார வெறியுடன் தமது தகுதிக்கும் வகிக்கும் பதவிக்கும துளியும் பொருந்தாத வகையிலும், பெரியாரின் அறிவாற்றல்—பொதுத் தொண்டு—மக்களிடம் அவருக்குள்ள செல்வாக்கு ஆகியவைகளை யோசித்துப் பார்க்காமலும், தீய—கேவலமான கடுஞ்சொற்களை வீசியிருப்பதைக் கண்டு இம் மாநாடு வருந்துவதுடன், நேருவின் இக்காட்டுமிராண்டிப் போக்கை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இதுபோன்றேதொடர்ந்து நேருபண்டிதர் தமிழர்களையும், தமிழ் நாட்டின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தலைவர்களையும் கேவலமாகப் பேசிவருவதைக் கண்டிக்கும் முறையில் தமிழரின் அருவருப்பைக் காட்ட வழிவகை காணவேண்டும் என்று இம் மாநாடு பொதுச்செயலாளர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

முன்: அண்ணா
வழி: என் வி நடராசன்
„ வி. பி. இராமன்
„ இரா. செழியன்
„ ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—12—57 செவ்வாய்

தோல்வியால் தொங்கும் முகம்!

வடக்கே வளருகிற தொழில்கள், பண்டித நேருவுக்குப் பரவசமளிக்கின்றன.

புதிதாக மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் நிர்மாணித்திருக்கிறோம்; அவை இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் உற்பத்தி துவங்கிவிடும் என்ற நிலைகண்டு, பண்டிதர் உள்ளம் பூரித்துப் போகிறது. பெருமையோடு அறிவிக்கிறார்—'என் நாடு வளரும் வகையையும், வேகத்தையும் காணுங்கள்' என்று.

ஆனல், அவர் பரவசப்படும் காட்சியை வர்ணிக்கும் இதழ்களிலேயே வேருெரு இடத்தில் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி, தமிழகத்தில் சிறுதொழில் வளர்ச்சிகூட இராது என்று கூறுகிறது.

1958—59-ம் ஆண்டில், இரண்டாம் திட்டத்தின்கீழ் அமுல்செய்வதற்கென்று, சுமார் ரூ. 35 கோடி பெறுமான திட்டங்களைத் தூக்கிக்கொண்டு டெல்லிக்குக் காவடி எடுத்தார், மாநில நிதி மந்திரி; ஆனல், அருள்பாலிக்க வேண்டிய டெல்லி தேவனே, அந்தத் திட்டத்தில் ரூ. 5 கோடி பெறுமானவற்றை வெட்டிவிட்டது—கருணைபொழிய மறுத்துவிட்டது.

திரும்பிவந்ததும், நிதி மந்திரி சுப்பிரமணியம் தனது தோல்வியை மறைக்கவும், எசமானர்களின் போக்கிற்குத் திரையிடவும்தான் முயற்சித்தாரே தவிர, திட்டம் வெட்டப்பட்டதற்கு நியாயம் சொல்ல முனைந்தாரேயன்றி, டெல்லியின் போக்கில் உள்ள அநியாயத்தைக் கண்டு, தான் அதிருப்தியடைந்திருப்பதாகக்கூடக் காட்டிக்கொள்ளவில்லை.

முதல் திட்டத்தில் மட்டுமின்றி இரண்டாம் திட்டத்திலும் தென்னட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதி மிகக்கொடுமையானது — அளவு கடந்தது. இதுபற்றி இந்த நாட்டு மக்கள் கொண்டுள்ள உள்ளக்கொதிப்பு, ஆட்சியாளருக்குப் புரிகிற 'பாஷை'யில் வெளியிடப்படவில்லை என்பதினல்தானே என்னவோ தெரியவில்லை—இன்னும் அந்த அநீதிக்குப் பரிகாரம் கண்ணுக்குப் புலப்படவில்லை

இந்த மாநில சர்க்காரும், தாங்கள் இடைவிடாமல் அனுபவிக்கும் மூக்கறுப்பில், மானநஷ்டம் எதுவும் இருப்பதாகக் கருதுகிற அளவு மானபிமானத்தில் அக்கறை கொண்டவர்களாகத் தெரியக் காணோம். இல்லாவிட்டால், தங்கள் கண்ணெதிரே இழைத்த கொடிய அநீதியை—தாங்களே சாடைமாடையாக, இலைமறை காய்மறையாகக் கண்டித்த அநீதியை—தென்னட்டின் அரசியல் பொருளாதார நிபுணர்கள் அனைவரும் அளவிட்டுக் காட்டிய அநீதியை—ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னட்டிற்கு ஓரவஞ்சனை செய்யப்பட்டிருக்கிறது என்ற அநீதியை—டெல்லியிலிருந்து மதுரை வந்த ஒரு மத்திய அமைச்சர், வாய்கூசாமல், 'அநீதி இழைக்கப்படவில்லை' என்று மட்டுமல்ல—'உரியதற்கும் அதிகமாகவே உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது' என்றும் பேசிவிட்டுப் போயிருப்பதை இன்றுவரை கண்டும் காணுமல், கேட்டும் கேளாமல் இருப்பார்களா?

இந்த மாநில சர்க்காரின் மிதமிஞ்சிய எஜமான விசுவாசம்—தாழ்வு மனப்போக்கு, இந்த நாட்டின் உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பதைவிட, தங்களின் பதவிப்பீடங்களைக் காப்பாற்றிக்கொள்வதில் உள்ள அக்கறை முதலியன, வடவர்கள் தென்னட்டவருக்கு மேலும் மேலும் கொடிய அநீதிகளை இழைக்கத் துணிவைத் தருகின்றன என்றால் மிகையாகாது.

இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் சொல்லுகிறவர்களாக இந்த மாநில அரசினர் தங்களை ஆக்கிக்கொண்டு விடுவதால்தான், மொரார்ஜி தேசாய் போன்றவர்கள் தங்களின் நாத தடிப்பை, இங்குவந்தே நீட்டிக் காட்டுகிறார்கள் என்பதைத் தவிர, வேறென்ன?

ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்த மாநிலத்திற்கென ஒதுக்கப்பட்ட மிகக் குறைந்த தொகை மதிப்புடைய திட்டத்தின் ஒரு கூறுகத்தான், 1958—59-ம் ஆண்டிற்கென சென்னை சர்க்கார் தயாரித்த திட்டமாக இருக்க வேண்டும்.

அந்தப் பங்கில்கூட, வரும் ஆண்டில் ரூ. 5 கோடி பெறுமான திட்டங்களை வெட்டுவது, அல்லது, சுப்பிரமணியம் கூறுகிறபடி ஒத்திப்போடுவது என்ற நிலை பிறந்திருக்கிறது. இதை அநியாயம் என்று கூறுமல் வேறென்னவென்று அழைக்க வேண்டும்?

கனம் சுப்பிரமணியம், தோல்வியால் தொங்கும் தனது முகத்தை எந்தத் திரை கொண்டு மூடினலும், நிலைமை என்னவோ மாறிவிடப்போவதில்லையே!

அங்கே—வடக்கே வளரும் திட்டங்கள்கண்டு பண்டிதர் பரவசப்படுகிறார்! ஆனல் தமிழகத்திலோ, சிறுதொழில் வளர்ச்சித் திட்டங்கள்கூடக் கைகூட முடியாத நிலைகண்டு, மந்திரிமார்களுக்கு மனம் பதறவில்லை; சாவதானமாக உலாவந்து கொண்டிருக்கிறார்கள்!

தமிழகத்தின் தலைவிதியை இன்னும் நான்காண்டுகளுக்கு இவர்கள்தானே நிர்ணயிக்கப் போகிறார்கள் என்று எண்ணும்போது, வெட்கமும் வேதனையும் பிடுங்கித் தின்கின்றன, மக்களை!

தபால்-தந்திச் சிப்பந்திகள் 'இனம்' வாங்கக்கூடாது!

தபால்—தந்திச் சிப்பந்திகள் பொது மக்களிடமிருந்து இனம், ஆகா வெகுமதிகளை ஆகியவைகளை ஏற்றுக்கொள்ளுகிற-அல்லது கோருகிற நெறிதவறிய பழக்கத்தை அடியோடு ஒழிப்பதில், நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு அந்த இலாகா சிப்பந்திகளைக் கேட்டுக்கொண்டு தபால்-தந்தி டைரக்டர்-ஜெனரல் சுற்றறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறாராம்!

பண்டித நேருவின் புகழ் மங்கி வருகிறது

அமெரிக்கா சென்ற நிதி அமைச்சர் வெறுங்கையுடன் திரும்பியதேன்?

சென்னை கூட்டத்தில் அண்ணு தந்த விளக்கம்

21—12—57-ல் சென்னை 12-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் நடைபெற்ற போதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றிய பேருரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது:—

"நேருவின் மதிப்பு குறைந்து வருவதால்தான் அவர் டி.டி.கே.-யை அனுப்பினர் அமெரிக்காவுக்கு!

"'அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அழகாகப் பேசி, அமெரிக்கர்களை மயக்கிவிடுவார்; அவருக்கு நன்ருக 'சோப்' போடத் தெரியும்' என்றுதான் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பினர் அவர் சென்றும் ஏன வெறுங்கையுடன் திரும்பிவந்தார்?

"அமெரிக்காவுக்குச் சென்றதும் அவர் என்ன செய்தார்? சென்ற உடனேயே 'கடன் கொடுங்கள்—கடன் கொடுங்கள்' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். இவரை அங்குள்ளவர்கள் வரவேற்று, 'எங்கு வந்தீர்கள்; என்ன விசேடம்?' என்று கேட்டால் இவர் அதற்கு 'ஒன்றுமில்லை; சும்மாதான் வந்தேன்; அமெரிக்கர்கள் மிக நல்லவர்கள்—மிகத் தாராளமாக எல்லோருக்கும் உதவி செய்கிறார்கள்' என்றெல்லாம் இந்தியாவிலுள்ள நாங்கள் கேள்விப்படுகிறோம்; அதனல்தான் நான் வந்து உங்களைப் பார்த்துப் பாராட்டிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்' என்று சாதாரணமாகச் சொன்னலே போதும்—உடனே ஐசன்ஹோவரே இவரை அழைத்து, 'உங்களுக்கு என்ன வேண்டும்? ஏதாவது பண உதவி தேவையானல் சொல்லுங்கள்; தாராளமாகத் தருகிறோம்' என்று கூறியிருப்பார். இவர் வாயைத் திறந்து 'பணம்' என்று கேட்டேயிருக்க வேண்டியதில்லை.

"அப்படியில்லாமல் இவர் இங்கிருந்து போகும்போதே, 'கடன் வாங்கப் போகிறேன்' என்று விளம்பரப்படுத்திக்கொண்டு போனர்.

"அமெரிக்காவில் டி. டி. கே.-யைப் பார்த்து, 'உங்கள் திட்டத்துக்குத் தேவையான பணம் கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டதற்கு, 'என்ன செய்வது? திட்டத்தைக் கைவிட வேண்டியதுதான்' என்று பதில் சொல்லியிருக்கிறார். இப்படிச் சொல்லலாமா? 'வெளிநாட்டு உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எங்கள் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்; அந்த அளவுக்கு இந்தியாவில் பண வசதி இல்லாமலில்லை; ஏதாவது உதவி கிடைத்தால் வரவேற்கலாம் என்று இருக்கிறோமே தவிர, வெளி உதவியையே நம்பி இருக்கவில்லை நாங்கள்' என்றல்லவா இவர் கூறியிருக்க வேண்டும்? அப்படிக் கூறினல், அவர்களே தாராளமாக இந்தியாவுக்குப் பணம் தரலாம். தருவதற்குக் கருதலாம்.

"ஒரு வீட்டை அடமானம் வைக்க வேண்டும் என்று வைத்துக்கொள்ளுங்கள்; வீட்டின் உண்மை மதிப்பு ரூ. 50 ஆயிரம் என்றாலும் இந்த வீட்டைக் கட்ட ரூ. 100 ஆயிரம் செலவாயிற்று; வீட்டின் உத்தரங்களெல்லாம் அசல் தேக்கு மரத்தாலானவை; அடியிலே வெகு ஆழத்திலே கடைக்கால் போடப்பட்டுள்ளது மிகக் கெட்டியான வீடு' என்றெல்லாம் சொன்னல்தான் ரூ 20 ஆயிரமாவது பாங்கிலே கடன் கொடுப்பார்கள். அதை விடுத்து 'வீடு மிகப் பழுதாகிவிட்டது; கடைக்கால் ஆடிப்போய்விட்டது; உத்திரங்களெல்லாம் உளுத்துப் போய்விட்டன; அதைப் பழுது பார்க்கத்தான் பணம் தேவைப்படுகிறது' என்றால், பணம் கிடைக்குமா?

"அதைப்போல, டி. டி. கே.யும் அங்குபோய், 'திட்டம்வெற்றிபெற நீங்கள்தான் உதவிசெய்ய வேண்டும்' என்று கெஞ்சியிருக்கிறார்.

"சுத்த பஞ்சைப் புத்தியை அமெரிக்காவில் சென்று காட்டினர்; அவர்கள் வெறுங்கையுடன் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்!

"கடன் கேட்க அமெரிக்காவுக்குச் சென்ற நேரமாவது சரியான நேரமா என்றால் அதுவுமில்லை. ரஷ்யா செயற்கைச் சந்திரனை பறக்கவிட்டிருந்த நேரம்; அமெரிக்கரெல்லாம் கவலையுடன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், டி. டி. கே. சென்று, 'என்ன, ஐசனேவர், சௌக்கியமா?' என்று கேட்டால் 'அட இரு அய்யா, நீ வேறு வந்து தொல்லை கொடுக்கிறீர்' என்று சொல்லியிருப்பார்கள்.

"தக்க நேரமாகப் பார்த்து அங்கு சென்றிருந்தால், அவர்களும் சந்தோஷத்துடன் வரவேற்றிருப்பார்கள்; 'எங்கே வந்தீர்கள்?' என்று கேட்டால், 'சும்மாதான் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்; நீங்கள் எதெதற்கோ உதவி செய்வதாகக் கேள்விப்பட்டேன்; பள்ளிக்கூடங்கள் கட்டவும், பாலங்கள் கட்டவும் பணஉதவி செய்வதாக அறிந்தேன். உங்களைப் பாராட்டுவதற்காகவே வந்தேன்' என்று சொன்னல், உடனே ஐசனேவரே, 'இந்தியாவுக்குத் தேவையான பணம் எவ்வளவு?' என்று கேட்டு அனுப்பிவைப்பார். பணம், கேட்காமலே நமக்கு வரும்.

"நேருவின் புகழ் இன்னும் மங்கிவிடவில்லை என்றால், கேட்டவுடனேயே பணம் கிடைத்திருக்க வேண்டுமே!

"காஷ்மீர்பற்றி ஐ. நா. சபையில் பேச கிருஷ்ணமேனனை அனுப்பினர்கள்; கிருஷ்ணமேனன் உடல்நலிவுற்று தள்ளாடிய நிலையில் சபைக்குப் போனர்; அவர் தள்ளாடியது போதையால் அல்ல; வழக்கமான இரத்தக் கொதிப்பு நோயால்தான்-மடாதிபதியைப்போல் இருபக்கமும் இருவர் தாங்கிச் செல்ல அவர் சபைக்குச் சென்றிருக்கிறார்.

"பலவீனத்துடன் சபைக்குச் சென்ற கிருஷ்ணமேனனல் இந்தியா சார்பில் தைரியமாகப் பேச முடியவில்லை; அவருடைய பேச்சால் எவரும் மயங்கிவிடவில்லை.

"நாளைக்கு ஒரு தலைவர்; வேளைக்கு ஒரு மந்திரிசபை மாறும் நிலையிலுள்ள இன்றைய பாகிஸ்தானிடமே இவர்கள் ஜம்பம் சாயவில்லை என்றால், துன்னும் ஜின்னு மட்டும் உயிருடனிருந்திருந்தால், அலகாபாத் பண்டிதரின் ஆட்டமெல்லாம் இப்படியாயிருக்குமா? இவரையா மற்ற நாட்டினர் மாலைபோட்டு வரவேற்பார்கள்?

"நேருவின் இராஜதந்திரமெல்லாம் எதிலும் பயனபடாமல் போய்விட்டன; அரைடன் விறகு வைத்து எரித்தாலும் திருப்பூர் பருப்பே வேகவில்லையென்றால், வடநாட்டிலிருந்து வரும் கேசரிப் பருப்பா வெந்துவிடும்?

"பணம் தேவையென்றால், அதற்கானவகையில் பக்குவமாகப் பேசிப் பெற்றுவரக்கூடிய திறமை வாய்ந்த சர். ஏ. இராமசாமி முதலியாரை அனுப்பியிருக்க வேண்டும். அவர் எங்கள் நீதிக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக நான் அவரை சிபாரிசு செய்வதாகக் கருதலாம்; அவர்கூட வேண்டியதில்லை—டாக்டர் சி. பி. இராமசாமி ஐயரையாவது அனுப்பியிருக்க வேண்டும்; சர். மீர்சா இஸ்மாயிலையாவது அனுப்பியிருக்கலாம்.

"'இதனை இதனல் இவன் முடிக்கும்...' என்ற குறளை நமது நாவலர் அடிக்கடி எடுத்துச் சொல்வதைப்போல, இன்ன இன்ன வேலைக்கு இன்னார்தான் தகுதி என்று தேர்ந்தெடுத்து அனுப்பினல் பலன் கிடைக்கும்.

"இதையெல்லாம் விடுத்து, எதையும் சிந்தித்துப் பார்க்காமல், தாறுமாருக மற்றவர்களைத் திட்டுவதினல்—ஆத்திரத்துடன் பேசுவதனல காரியம் வெற்றி பெற முடியாது. தனது புகழ் சரிந்து வருகிறது என்பதை நேரு உணர வேண்டும்."

'ஆங்கில அறிவு தேவையானதாகும்'

பண்டிதர் தெளிவாக்குகிறார்

ஐதராபாத், டிச. 30—"இந்தியாவில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது அவசியமாகும். பெரும்பாலான மக்கள் அதைப் போதுமான அளவு அறிந்திருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

"ஆங்கில மொழியுடன் 100 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பிருக்கிறது; மேலும், ஆங்கிலம் உலகில் பெரும்பாலும் உபயோகத்தில் உள்ள மொழியாகும்; ஆகையால், அம்மொழி அறிவு நமக்குக் கட்டாயம் இருக்கவேண்டும்; அந்த அறிவும் உயர்தரமாக இருக்கவேண்டும்"

என்று பண்டித நேரு, இந்திய ஆசிரியர் மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு மாநிலங்களிலும் 147 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 124 நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டனவாம்!

இந்திய சர்க்கார் இத்திட்டத்தைப் பரப்புவதற்காக 1957 நவம்பர் மாதத்தில் ரூ. 3,88,708 உதவி மானியமாக அனுமதித்திருக்கிறது; அத்தொகை கிராமாந்தரங்களில் 72 'கிளினிக்'குகளையும், நகர்ப்புறங்களில் 35 'கிளினிக்'குகளையும் நிறுவுவதற்குப் பயன்படுத்தப்படுமாம்.

இந்திக்கு வக்காலத்து!

இராசேந்திரர் கூறும் காரணம்

புவனேசுவர், டிச. 30—ஒரிசா மாநிலத்தில் சாகித்திய அகாடமியை இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் துவக்கிவைத்துப் பேசுகையில், இந்தி அகில இந்திய மொழியாகத் நிர்மாணிக்கப்பட்டுவிட்டதால், அது எந்தத் தனிப்பட்ட மாநிலத்திற்கும் உரியதல்லவென்றும், ஆட்சியின் நிர்வாகத்திற்கு ஒரு பொது மொழி இருக்க வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறுவதால் இதில் தகராறுக்கு இடமில்லை யென்றும், அதற்காக ஒரு மொழியைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், இந்தி பெருவாரியான மக்களால் பேசப்படுவதால் அதன் அடிப்படையில் குறிப்பிட்ட காரியத்திற்காக இந்தி தேர்ந்தெடுக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழர் வாழ்வினைச் சீர்குலைக்கும் இந்தியை எதிர்ப்போம்

தமிழன் தலைநிமிர்ந்து நடக்க வழிவகுப்போம்

மாற்றாரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடந்தரோம்

தோழர் க. அன்பழகன் முழக்கம்

சென்னை, 36-வது வட்ட தி. மு. கழகச்சார்பில் கடந்த 8—12—57 மாலை வடக்குத் தியாகராயநகரில் நடைபெற்ற போதுக்கூட்டத்தில் பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் அடியில் தரப்பட்டுள்ளது:—

"நீதிக் கட்சி—சுயமரியாதை இயக்கம் — திராவிடர் கழகம் என்ற பெயரால் முற்போக்குக் கொள்கைகளை, இந்த நாட்டில் பரப்பிய நாம் இன்று, தி. மு. கழகம் என்ற பெயரிலே வளர்ந்துகொண்டு வருகிறோம். ஆரம்ப காலத்திலிருந்த வளர்ச்சிக்கும் இப்போதுள்ள வளர்ச்சிக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாசத்தைப் பார்க்கிறோம்.

"தேர்தலிலே தி. மு. கழகம் ஈடுபட்டபின் தி. மு. க. கூட்டங்களுக்கு மக்கள் ஆவலுடன்வந்து கூடுகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் தி. மு. கழகம் என்ன சொல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியுடன் — எண்ணத்துடன் வந்து கூடுகிறார்கள். முன்பு சுதந்தரப் போராட்டக் காலங்களில் தேசிய இயக்கம் எந்த அளவு ஆழமாக மக்கள் மனதிலே பதிந்ததோ, அதைவிட ஆழமாக இன்று, தி. மு. கழகம், மக்கள் உள்ளத்திலே வேர்விட்டு ஒன்றிவிட்டது. காங்கிரஸ் கட்சியில் வயது முதிர்ந்தவர்களும், பதவியில் அமர்ந்திருப்பவர்களும் தான் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தங்கள் செல்வாக்கைப் காப்பாற்றிக் கொள்பவர்களாகவும், சுயநலத் திட்டமுள்ளவர்களாகவும்தானிருப்பார்கள்.

"நல்ல எழுச்சியுள்ளம் கொண்ட இளைஞர்களைக் காங்கிரசிலே காணமுடியாது; அதே போல, தெளிவான கொள்கைகளைக் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயும், உண்மைத் தலைவர்களை சோஷலிஸ்டுக் கட்சியிலேயும், பின்பற்றக்கூடிய கொள்கை, திட்டங்களை பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியிலேயும் காண முடியாது. தமிழ்நாட்டுக்குப் பயன்படக்கூடிய எதையும் மற்றக் கட்சிகளிலே காணமுடியாது.

"தி. மு. கழகம் எதையும் சிந்தித்துச் செயலாற்றும் திறன் படைத்தது. அரசியல்—பொருளாதாரம் — சமுதாயம் ஆகிய மூன்று துறைகளுக்கும் குருதி ஓட்டமாக அமைந்திருக்கிறது, தி. மு. கழகம்!

"இதிலே இரண்டு இலட்சம் உறுப்பினர்களும், ஆதரவாளர்கள் அதைவிடப் பல மடங்கினராகவும் இருக்கின்றனர்.

"நம் இலட்சியமெல்லாம், 'தென்னாடு தென்னாட்டவரால் ஆளப்படவேண்டும்; தமிழ்மொழியும், தமிழ்க் கலையும், பண்பும் காப்பாற்றப்பட வேண்டும்; தமிழன் யாருக்கும் தலைவணங்கக் கூடாது' என்பதுதான். நம் இலட்சியம் வெற்றிபெறுவதற்கான அறிகுறிகள் இப்பொழுது தென்படுகிறது.

"இருபது ஆண்டுகளுக்குமுன் இந்தியை எதிர்த்தவர்கள் நாம் தான். அப்பொழுது கட்டாய இந்தியைப் புகுத்திய இராசகோபாலாச்சார், 'நான் பனங்காட்டு நரி; இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டேன்' என்றார்.

"அப்பொழுது பல அறிஞர்கள் இந்தியை எதிர்த்தார்கள். தெளிவாக, தமிழர்களை எண்ணிப்பார்க்குமாறு எடுத்துச்சொன்னார்கள். இந்தித் திணிப்பை மறைமலையடிகள் எதிர்த்தார்; சோமசுந்தர பாரதியார் எதிர்த்தார்; சர். ஏ. டி. பன்னீர்செல்வம் எதிர்த்தார்; பெரியார்—அண்ணா உள்பட பலர் சிறை புகுந்தார்கள்; தாய்மார்களெல்லாம் தாய்மொழி காக்கச் சிறை சென்றனர்; தாளமுத்து—நடராசன் என்பவர்களை இந்தியை எதிர்க்க அனுப்பிவைத்த நாம், அவர்களைத் திரும்பிப் பெறவேயில்லை.

"இந்தி, தமிழர் நாகரீகத்தை-தமிழர் வாழ்வினை அழித்து ஒழிக்கக்கூடியது என்று நாம் அன்றே சொன்னோம்; அன்று சென்னை முதலமைச்சர் பதவியிலிருந்த ஆச்சாரியார், அதைக் கேட்கவில்லை. அதன் பின்னர், அதைவிடப் பெரிய பதவியான கவர்னர்-ஜெனரல் பதவியை வகித்தவர் — காங்கிரசைக் காப்பாற்ற மீண்டும் முதலமைச்சர் பதவியை ஏற்றவர்——அவர், எந்த இந்தியை முன்பு தமிழ்நாட்டில் புகுத்தினாரோ, அதே இந்தியை இன்று எதிர்க்கிறார்; தான் நம்புகிற இந்திய ஒற்றுமைக்கு—இந்திய நல்வாழ்வுக்குத்தான் இந்தியை எதிர்த்து முழக்கமிடுகிறார்; அதற்கான பல்வேறு காரணங்களையும் எடுத்துக் கூறி மறுப்புரைக்கிறார்.

"நாம் சொன்னால் 'வகுப்புத் துவேஷம்' என்பார்கள்; 'அரசியல் சிந்தனை' என்று சொல்லுவார்கள்; அதே கருத்தை ஆச்சாரியார் எடுத்துச் சொல்லுகிறாரே! யார் அவரை எதிர்க்கமுடியும்? அதை அலட்சியப்படுத்தி, அடக்கி ஒடுக்கிவிடுவார்களோ என அஞ்ச வேண்டாம். அடக்குமுறைகளையெல்லாம் அவர்மீது பாய்ச்ச எவரும் துணியார்; எந்த உண்மையையும் துணிந்து சொல்லக்கூடியவர் அவர்.

"ஆச்சாரியார் ஒரு கேள்விக்குறி — அபாய எச்சரிக்கை! கேள்வி முற்றிவிடுமானால், விடையைப் பெறுமிடத்தில் முதலிடத்தில் இருப்பார் ஆச்சாரியார்!

"'இந்தி இந்தியாவின் மொழி; என்வே, இந்தியை ஏற்க விரும்புகிறீர்களா, இந்தியாவையே கைவிட விரும்புகிறீர்களா, நீங்கள்' என்று வடநாட்டினர் கேட்கின்றனர். உடனே, இந்தியை எதிர்க்கும் சிலரும் பின்வாங்கிக்கொள்கிறார்கள். ஆச்சாரியார் அப்படிப்பட்டவரல்ல; அந்தக் கேள்விக்கு விடை, கண்டுபிடிக்கப்பட இருக்கிறது.

"சுயராஜ்யத்துக்குப் போராடிய காலத்தில், முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் வேண்டுமென்று கோரி இஸ்லாமியர்கள் எழுச்சியடைந்த நேரத்தில் — பாகிஸ்தான் பிரிவினையை நேருவும், காந்தியும் எதிர்த்த நேரத்தில் முதல் முதலில் பாகிஸ்தானுக்கு வழிவகுத்தவர். பண்டிதரின் மூளையில் திருப்பத்தை உண்டாக்கியவர் ஆச்சாரியார்; பெரியதொரு அரசியல் நெருக்கடிக் கட்டம் ஆச்சாரியாரால்தான் தீர்த்துவைக்கப்பட்டது!

"'பாகிஸ்தான் [illegible]ம் பிரித்துக் [illegible]படவேண்டு[illegible]' என்பதற்கு ஆச்சாரியார் ஒரு உதாரணம் சொன்னார்—'ஒரு வேட்டி கொஞ்சம் கிழிந்துபோயிருந்தால் அதை இரண்டு துண்டாகக் கிழித்துவிடுவதுதான் நல்லதே தவிர, கிழிந்த வேட்டியை மூட்டித் தைத்தாலும் அது நீடித்து நிற்காது; தைத்த இடத்திலேயே மீண்டும் கிழியத்தான் செய்யும்; அதைப்போல, பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்துவிடுவதுதான் நல்லது'—என்றார்.

இன்று திராவிடமும் அதே நிலையில்தான்— நைந்துபோன நிலையில்தானிருக்கிறது. இதை அன்று உணரவில்லை; இன்று உணரப்படுகிறது. திராவிடம் நைந்துபோன உண்மையை ஏறக்குறைய 6-7 திங்களுக்கு முன்பே ஆச்சாரியார் உணர்ந்துவிட்டார்; அதனால்தான், 'திராவிடத்தைக் காப்போம்' என்று எழுதினார்!

"பெரியார் அவர்களின் போராட்டத்தை 'காட்டுமிராண்டித்தனம்; பைத்தியக்காரத்தனம்' என்றெல்லாம் திட்டிவிட்டுச் சென்றிருக்கிறார் பண்டித நேரு. இதை விளக்கி, தெளிவாக அண்மையில் ஒரு பத்திரிகையிலே 'கார்ட்டூன்' போடப்பட்டிருந்தது. பெரியாரும், ம. பொ. சி.-யும், முத்துராமலிங்கத்தேவரும், இராவணன் கும்பகர்ணன் போன்ற அசுரர்களைப்போலவும், அவர்களைக் கண்டு நேரு நடுங்குவது போலவும் அந்தப் படத்திலே சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது.

"சுரர்கள் மிக நியாயவான்கள் என்றும், அசுரர்களிடம் அந்த நியாயம் இல்லையென்றும் புராணங்களிலே எழுதிவைத்திருக்கிறார்கள். இராவணன் வழி வந்தவர்கள்தான் நாம். இராவணனை சிறந்த மறமன்னன் என்று பாராட்டியிருக்கிறார்கள்.

"நேரு, தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் பல அறிவுரைகள் கூறியிருக்கிறார்; அதில், 'அசுரர்கள் என்பவர்கள் தென்னாட்டுத் திராவிடர்கள் தான்' என்று கூறியிருக்கிறார். நேரு தன் முன்னோர்கள் செய்த தவறை, இழித்தும் பழித்தும் கூறியிருக்கிறார்.

"அப்படிப்பட்ட நேருதான், இங்கு வந்து நம்மைப் பார்த்து, 'காட்டுமிராண்டிகள்' என்கிறார். காட்டுமிராண்டிகள் இங்கு இல்லை வடநாட்டில் தானிருக்கிறார்கள். அங்குதான் வீட்டுக்கு வீடு படுகொலைகள் நடந்தவண்ணமிருக்கின்றன.

"வடநாட்டில்—மத்திய மாகாணத்தில் கொள்ளைக் கூட்டம் செய்துவரும் அட்டகாசத்தை ஆட்சியாளரால் அடக்க முடியவில்லை. கொள்ளைக் கூட்டத் தலைவன் பூபத் என்பவன் ஒரு பட்டாளத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு காடுகளிலே பதுங்கி இருக்கிறான். அவனையும், அவன் கூட்டத்தாரையும் போலீசாரால் இன்னும் பிடிக்க முடியவில்லை. இன்னொரு பெண்மணி கொள்ளைக் கூட்டத் தலைவியாக இருக்கிறாள். அவளையும் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. கொள்ளைக் கூட்டங்களெல்லாம் வடநாட்டில்தான் இருக்கின்றன. தென்னாட்டில் யாராவது திருடர்கள் இருக்கிறார்களென்றால் அவர்களெல்லாம் வடநாட்டு ஆட்சியினால் — வறுமைக் கொடுமையினால் திருடர்களாக்கப்பட்டிருப்பவர்கள்தான். திருத்தினால் திருந்த மறுக்கும் சமுதாயமல்ல தமிழர் சமுதாயம்!

"தென்னாட்டில் எவன் காட்டுமிராண்டியாக இருக்கிறான்? யாரைப் பார்க்கிறபோது காட்டுமிராண்டிகளாக இருக்கிறார்கள்—வடநாட்டினரையா, தென்னாட்டினரையா? யாரைப் பார்த்து என்ன பேசுகிறோம் என்றுகூட அறியாமல், நேரு பேசியிருக்கிறார். 'பெரியாரைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைக்க வேண்டும்' என்று நேரு பேசியிருக்கிறார்; முடிந்தால் செய்து பார்க்கட்டும்!

"உண்மையிலேயே, தமிழ் நாட்டு எழுச்சியின் காரணத்தை—அடிப்படையை எல்லா மக்களும் உணர்ந்தார்களேயானால், நேரு, நாட்டின் தலைவராக இருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"நான் பெரியாருக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவதாகக் கருத வேண்டாம்; நாங்கள் ஆதரித்தால்கூட எங்கள் ஆதரவைப் பெரியார் விரும்பமாட்டார். எங்களால் தனது காரியம் கெட்டுவிட்டதாகக்கூடக் கூறக்கூடியவர் அவர். எனவே, அவருக்காக நான் இதைப் பேசவில்லை. பெரியாரை நேரு திட்டியது ஒவ்வொரு தமிழனையும் திட்டியதாகும். ஜனநாயக நாட்டின் தலைவர் தகாத பேச்சைப் பேசியிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டவே இதைக் கூறுகிறேன்.

"'பிரச்சினையைத் தீர்க்க சட்டம் தேவையில்லை — சந்திப்புத்தான் தேவை'; என்று அண்ணா சட்ட சபையில் கூறினார். உண்மையிலேயே நேரு ஜனநாயகத்துக்கு மதிப்புத் தருபவரானால், பெரியாரைச் சந்தித்துப் பேசியிருக்கவேண்டும்.

"பெரியாரை 'காட்டுமிராண்டி' என்று சொன்ன நேரு, காட்டுமிராண்டிகளின் தலைவருடன் சமாதானம் செய்துகொண்டவர் தானே! நாகர்கள் தலைவருக்காக சட்டத்தைக்கூடத் திருத்தினார்களே.

"நாகர்கள் வாயால் கேட்கவில்லை; கையிலே கிடைத்தவற்றையெல்லாம் எடுத்து அடித்தார்கள்.

"நாங்கள், நாகர்கள் ஆகமாட்டோம்; ஆனால், எங்கள் கொள்கையை நாட்டுக்கு எடுத்துக் காட்டுவோம்.

"பெட்ரோல் சுத்திகரிப்புத் தொழிற்சாலை வைப்பதிலே தங்கள் மாகாணத்துக்கு உரிமை வேண்டுமென்று பீகார் மாகாண மக்கள் கிளர்ச்சி செய்தனர்; 'நேருவைப் பின்பற்றமாட்டோம்; அவர் பேச்சை ஒப்பமாட்டோம்' என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள்; 'பிற மாகாணத்தில் தொழிற்சாலைவைக்க சம்மதிக்க மாட்டோம்' என்று குரலெழுப்பிவிட்டார்கள்.

"இந்திக்குப் பஞ்சாபிலே—வங்காளத்திலேயெல்லாம் எதிர்ப்பு உணர்ச்சி கிளம்பியிருக்கிறது; 'இந்தி பேசும் மத்தியப் பிரதேசம்—உத்தரப் பிரதேச ஆதிக்கத்துக்கு நாங்கள் உட்படமாட்டோம்' என, பல மாநிலங்கள் தெரிவித்துவருகின்றன. பம்பாயிலே குஜராத்தியர் குமுறல்; மராட்டியர் எழுச்சி;—இதெல்லாம் என்ன அர்த்தம்?

"எனவே, டெல்லி ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு, தென்னாடுமட்டுமல்லாமல் வடநாட்டிலும் எதிர்ப்புஏற்பட்டுள்ளது.

"வடநாட்டில் நடைபெறும் கிளர்ச்சிகளையெல்லாம் அர்த்தமற்றது—காட்டுமிராண்டித்தனம் என்றுகூற நேருவுக்கு நாவெழவில்லை; நம்மைப் பார்த்துத்தான் கூறுகிறார்.

"தமிழர்கள் தன்னுணர்வு பெற்று தலைநிமிர்ந்து நடக்க வேண்டுமென்றால் — மாற்றாரின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் இடந்தராமல் இருக்கவேண்டுமென்றால், திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும். எல்லோரும் தி. மு. கழகத்தில் சேர்ந்து பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

எந்த ஒரு மொழிக்கும் தனி மதிப்பு கூடாது

இதர தேசீய மொழிகளுக்குப் பாரபட்சம் காட்டலாகாது

வங்க நல்லறிவாளர் கருத்து

கல்கத்தா, டிச. 29—

"இந்தியாவில் உள்ள எந்த ஒரு மொழிக்கும், இதர மொழிகளுக்குப் பாரபட்சம் காட்டுகிற வகையில், எந்த ஒரு அந்தஸ்தும் தரக்கூடாது" என்று, வங்காள நல்லறிவாளர் பலர் கூடி கருத்தறிவித்திருக்கின்றனர்.

இந்திய தேசீய மொழிகளின் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற அந்த மாநாட்டில், 200-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள்—எழுத்தாளர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள் எல்லாம்—கலந்துகொண்டிருக்கின்றனர்.

பிரபல எழுத்தாளரான டாக்டர் நரேஷ்சென் குப்தா என்பார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியிருக்கிறார்.

மாநாட்டுத் தலைமையுரையின் சாரம், 'இந்தியாவில் பல்வேறு பிரதேசங்களிடையேயும் தொடர்புகொள்ளுகிற ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்க வேண்டும்' என்று கூறுகிறது.

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம், 'இந்தியா பல மொழிகளையும், கலாச்சாரங்களையும் கொண்டது; வளமிக்க இந்தப் பல்வகை மொழிகளும், பண்பாடுகளும் தத்தமது இயற்கைப் பொலிவுடன் மிளிருவதை அங்கீகரிப்பதினாலும், பரஸ்பரம் புரிந்துகொள்ளுகிற-சகித்துக் கொள்ளுகிற மனப்பான்மையினாலும்தான் இந்தியாவில் ஒற்றுமையை நீடிக்கச் செய்ய முடியும்' என்று கூறுகிறது.

'எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து—சம வாய்ப்பு என்ற அடிப்படையில் எல்லா மொழிகளும் இயற்கையாக வளரவேண்டும் என்பதே மாநாட்டின் நோக்கம்' என்று தீர்மானம் கூறுகிறது.

"இந்தி மொழியின்மீதோ, இந்தி பேசும் மக்கள் மீதோ எங்களுக்கு எந்தவித வெறுப்போ, கோபமோ இல்லை.

"இந்தியாவின் எல்லாப் பிரதான மொழிகளையும் தேசீய மொழிகளாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்; இவை ஒவ்வொன்றும் ஏக காலத்தில்—சம அந்தஸ்து என்ற அடிப்படையில், பாரபட்சம் எதுவுமின்றி வளருவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அதனால், எந்த ஒரு தனிமொழிக்கும் இதர மொழிகளுக்கு இல்லாத வகையில் பாரபட்சமாக—எந்த ஒரு அந்தஸ்து தருவதும் கூடாது என்று உறுதியாகக் கூற விரும்புகிறோம்"

என்றும் தீர்மானம் கூறுகிறது.

தலைமைதாங்கிய டாக்டர் சென் குப்தா, 'ஒரு தேசீய சமூகத்திற்கு ஒரு மொழி வேண்டும் என்றால், அது, அந்த சமூக மக்களின் தாய்மொழியாகத்தான் இருக்கமுடியும்' என்று கூறியிருக்கிறார்.

"இந்தியாவின் பல பாகங்களிடையேயும் தொடர்புகொள்ள ஒரு பொதுமொழி தேவை. ஆங்கிலம் அத்தகைய பொதுமொழியாக நெடுங்காலமாக இருந்து வருகிறது. மொழிப் பிரச்சினைக்கு உள்ள ஒரே சிறந்தவழி, ஆங்கிலத்தைத் தொடர்ந்து, பல மாநிலங்களிடையேயும் தொடர்புகொள்ளும் மொழியாக வைத்துக்கொள்ளுவதுதான்"

என்று அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

பெரியாரை விடுதலை செய்திடுக!

சிறையில் தள்ளப்பட்டுள்ள தி. க. தோழர்களையும் விடுவித்திடுக!

கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி சாதி ஒழிப்புக்கு வகை காணவேண்டும்!

சென்னை அரசாங்க பதிவு பெறாத ஊழியர்கள் குறைகளை களைந்திடுக

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக மாநாட்டின் முடிவுகள்

கடந்த 27, 28—12—57-ந் தேதிகளில் நாகர்கோவிலில் நடைபெற்ற நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக இரண்டாம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கீழே தரப்படுகின்றன:—

★

1. அனுதாபம்

தென்னகத்தின் கலைச்செல்வரும், நகைச்சுவை மன்னராகவும் விளங்கிவந்த என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவு குறித்து இம்மாநாடு தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது பிரிவாற்றால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. இடைக்கால பஞ்சப்படி உதவி போதாது

மத்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படியாக ரூ. 5 கொடுக்க, அதற்கென நியமிக்கப்பட்ட குழு சிபாரிசு செய்திருப்பதை, மிகவும் குறைவானது என இம்மாநாடு கருதுவதுடன், விலைவாசி உயர்வுக்கேற்ப ஊழியர்களின் பஞ்சப்படியை உயர்த்தாது பிடிவாதம் காட்டிவரும் மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு கண்டிக்கிறது.

3. தமிழக என்.ஜி.ஓ.-க்கள் கோரிக்கை

மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதத்திற்கொப்ப சென்னை மாநிலப் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும் எனப் பல காலமாகக் கோரிவந்தும், அக்கோரிக்கையை இதுவரை அலட்சியப்படுத்திவரும் சென்னை அரசாங்கத்தையும், மத்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—தலைவர்

4. உணவு பிரச்சினையில் தென்னாட்டவருக்கு அநீதி

உணவு நெருக்கடியைச் சமாளிக்க தென்னாட்டினர் அரிசி உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு கோதுமை உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கூறுவது, தென்னாட்டினருக்கு இழைக்கப்படும் அநீதியாகும் என்றும், வடவருக்கு எப்படி வெளிநாடுகளிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யும் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதோ அதேபோல், நமக்கும் அரிசி பெற்றுத்தரும் பொறுப்பினையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தலைவர்

5. திட்டத்தைத் திருத்து!

இந்தியத் துணைக்கண்டத்தில் வாய்ப்புகளையும் வசதிகளையும் முன்கூட்டியே ஆராயாமல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தமுடியாத அளவில் அமைத்து, அதனால் ஏற்பட்ட சிக்கல்களை சமாளிக்கமுடியாமல், திட்டத்தின் 'அடிப்படை' என்ற பெயரால் வடநாட்டிலுள்ள பெரிய திட்டங்களை மட்டுமே அமுலாக்க முயற்சிக்கும் இந்தியப் பேரரசின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், உடனே தென்னகத்தின் இயற்கை வளத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக முற்றிலும் பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமும், வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமும், திராவிட மக்களுக்கு [illegible] வழங்கும் வகையில், நாட்டின் பொருளாதார நிலை தொடர்ந்து சீர்குலையாது பாதுகாக்கப்படும் முறையில், திட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

முன்: செழியன்
வழி: வி. பி. ராமன்

6. கண்துடைப்பு ஏன்?

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு பல கோடி ரூபாய்களைப் பாழ்படுத்தி நடத்தப்படும் தேசிய அபிவிருத்தித் திட்டம் பயனற்றதாகவும், ஊழல் நிறைந்ததாகவும், வெறும் கண்துடைப்பு வேலையாகவும் இருந்து வருகிற தன்மையை திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு எடுத்துக்காட்டி வந்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல்வந்ராய் குழுவின் அறிக்கை இருப்பதை அரசியலாரின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், வெறும் கண்துடைப்பு வேலையாக மட்டும் இருப்பதை மாற்றி, மக்கள் அனைவருக்கும் பயன்தரும் விதத்தில்—கட்சியின் ஆதிக்கத்திற்குப் பயன்படுத்தாமல் எல்லாப் பகுதிகளுக்கும் உதவும் வகையில் திட்டத்தைத் திருத்தி செம்மையாக நடத்துமாறு மத்திய அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: கே. இராசாராம்
வழி: ஆர். மாணிக்கம்

7. ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பீர்!

(அ) புதிய ஸ்தல ஸ்தாபன மசோதா மக்களாட்சியையும், கிராம அரசையும் வளர்ப்பதற்குப் பதிலாக ஏற்கனவே மேற்படி அமைப்புகளுக்கு உள்ள உரிமைகளையும், அதிகாரங்களையும் பறித்து அதிகார வர்க்கத்திடம் ஒப்படைத்து, மக்களாட்சி முறையையே கெடுப்பதாக இருக்கிறதாகையால், இம்மாநாடு இந்தப் புதிய முறையினை வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடத்துவது என்ற கருத்தை சென்னை அரசாங்கம் சொல்லிவருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே பொதுமக்களால் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்த ஜனநாயக முறையையே கடைப்பிடித்து வரவேண்டும் என்று சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

முன்: ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ.
வழி: எம். குழந்தைவேலு எம்.சி.,

8. எல்லையை மீட்க முயற்சி தேவை

தமிழகத்துடன் இணைக்கப்பட்ட திட்டத்தில் டெல்லி ஏகாதிபத்திய ஆட்சியினரின் அதிகார பலத்தாலும், தமிழ் மாநில அரசியலாரின் கவலையற்ற போக்கினாலும் விடுபட்டுப்போன பகுதிகளான செய்யாற்றின்கரை, தேவிகுளம், பீர்மேடு சித்தூர் வட்டங்களையும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டிய முயற்சியில் தீவிரமாக இறங்குமாறு தமிழ் மாநில அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: தூத்துக்குடி ஜோசப்
வழி: நாஞ்சில் அன்பேழில்

9. கன்னியாகுமரி மீனவர் குடியிருப்பு வசதி

கன்னியாகுமரி முனையில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், குடியிருக்கும் வசதியின்றி இன்னல்கள் பல அனுபவிப்பதை மாநில அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், கடற்கரையை அடுத்து இருக்கும் பொது நிலத்தில் அவர்கள் குடியிருக்க அனுமதி வழங்குமாறு அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: டி. ஆர். சுப்பிரமணியம்
வழி: நாஞ்சில் ஜேவியர்

10 நசித்துவரும் கைத்தறித் தொழிலை சிதறடிக்காதீர்!

இதுகாறும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய்க்கு ஒன்றரை அணா என்ற அளவில் கொடுத்துவந்ததை 1957-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் ஒரு அணாவாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன், இன்னும் ஓராண்டுக்குள் அந்த உதவித் தொகையை அறவே நிறுத்திவிடப்போவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்ற மத்திய அரசினரின் உத்திரவை வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கனவே நசிந்துவரும் கைத்தறித் தொழிலை மேலும் சிதறடிக்காமல் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க உதவித் தொகையை ஒன்றரை அணாவாகவே கொடுத்து வரவேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: மதுரை சந்தானம்
வழி: டி ஆர். சுப்ரமண்யர்
,, அலமேலு அப்பாதுரை

11. போக்குவரத்துத்துறை தொழிலாளர் ஊதியம்

போக்குவரத்து முதலிய துறைகளை தேசியமயமாக்குவதென்ற திட்டத்தின் கீழ் திருநெல்வேலி பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்குவதுடன், இத்துறையில் தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களை அரசாங்கம் பயன்படுத்தித் தொடர்ந்து வேலை தரவேண்டுமென்று அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக தமிழ் மாநிலத்தில் பிற இடங்களில் பணிபுரியும் போக்குவரத்துத் துறை அலுவலாளர்களுக்கு, இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தரப்படும் அளவில் சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்பதுடன், பொதுவாக கேரள மாநிலத்தில் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதப்படி தமிழ் மாநில பஸ் போக்குவரத்துத் துறை அலுவலாளர்களுக்குத் தரப்படுவதற்கான முறையை செயல்படுத்துமாறு இம்மாநாடு தமிழ் மாநில அரசினரை கேட்டுக்கொள்கிறது

முன்: இராமவேள்ளையன்
வழி: கருணாகரன்

12. திருவனந்தபுரம்—நெல்லை இரயில் இணைப்பு

திருவனந்தபுரம்—நெல்லை இரயில் இணைப்பை (நாகர்கோவில் வழியாக) உடனடியாக செயல்படுத்துவதற்கான வழிவகைகளைக் காணுமாறு மத்திய அரசினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன்: நாஞ்சில் அன்பேழில்
வழி: கமலா-பாலசுந்தரம்

13. கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவமனை நிறுவுக!

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உடனடியாக ஒரு மருத்துவமனையை நிறுவ வேண்டுமென்று அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) விளவங்கோடு தாலுகாவின் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க சிற்றாறு அணைத் திட்டம் நெய்யாறு அணைத் திட்டம், இடதுகரை சானல் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த வேண்டுமென்று இம்மாநாடு அரசினரை கேட்டுக்கொள்கிறது.

முன்: சேதுராஜ்
வழி: செல்லக்கண்ணம்மாள்

14. இந்தியை எதிர்த்துப் போராட வாரீர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஓர் பகுதியாக இன்று திராவிடம் பிணைக்கப்பட்டிருப்பினும் திராவிடக் கூட்டாட்சி எனும் தனி அரசுக்காகப் பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவை என்ற தத்துவத்தை மறுக்கிறது.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்ற போலித் தத்துவத்தைக் காட்டி இந்தி ஆட்சி மொழியாக ஆக வேண்டும் எனக் கூறிவரும் டெல்லி ஆதிக்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் நோக்கத்தில் வானொலி, தபால்-தந்தி, படக்காட்சி, நாணய முறை, அரசாங்க அறிவிப்புகள், கல்வித் துறை போன்ற அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட எல்லா அமைப்புகளிலும் இந்தியை நேரிடையாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் முயற்சிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடத்தில் அந்தந்தப் பகுதிகளில் தாய் மொழி ஆட்சிமொழியாகவும், ஆங்கிலம் தொடர் மொழியாகவும் இருந்திட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கனவே வலியுறுத்தியிருப்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கும் டெல்லி ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்துத் தென்னகத்திலுள்ள எல்லாக் கட்சிகளும், எல்லா தலைவர்களும், சென்னை அரசியலாரும் திட்டவட்டமான கண்டனத்தைத் தெரிவித்திருந்தும், அவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தி, இந்தியைத் திணிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைக் கண்டிப்பதுடன், இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுமேயானால் அதைத் தடுத்துநிறுத்துவதற்காக இறுதிவரை போராடத் தயாராகுமாறு தென்னக மக்களை இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

—முன்: அண்ணா
—வழி: என் வி நடராசன்
,, இரா. செழியன்
,, வி. பி. இராமன்
,, ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ,

15. பெரியாரை விடுதலை செய்க!

(அ) பார்ப்பனரைக் கொல்லுவதோ அக்கிரகாரத்தைக் கொளுத்துவதோ போன்ற பலாத்காரச் செயல்கள் மூலம் சாதி ஒழிப்பு நடைபெறாது என்று பெரியார் அவர்கள் சென்னை எழும்பூர் பொதுக் கூட்டத்தில் திட்டவட்டமாக கூறியான பிறகும், அவரைச் சிறையில் வைத்திருக்கும் சர்க்கார், பெரியாரையும், அவர் திட்டம் காரணமாகச் சிறைப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தோழர்களையும், தோழியர்களையும் உடனடியாக விடுதலை செய்வதுதான் முறையும் நீதியுமாகும் என்பதை வலியுறுத்திக் கூறுவதுடன், பெரியாரை

(1-ம் பக்கம் பார்க்க)

புத்தாண்டு வாழ்த்து

தமிழகப் பேரன்புடையீர்!
புதிய ஆண்டு (1958) இன்ப ஆண்டாக மிளிர்க!

அன்பன்,
போரூர் ஆர். இராமானுசம்
நீடாமங்கலம்: 1—1—58

சென்னை — வண்ணை அண்ணா படிப்பக உறுப்பினர்களுக்கு:

1—1—58 காலை 10 மணிக்கு மேற்படி படிப்பகப் பணிமனையில் (26, சோலையப்பன் தெரு) உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது 22-12-57 பொதுக் கூட்ட வரவு-செலவுக் கணக்கு பார்க்கப்படும்.

சென்னை சர்க்கார்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறது என்று தெரியவருகிறது. கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள அலுவலகங்களிலும், கிராம மக்களுடன் அதிகமான அளவில் கடிதப் போக்கு-வரத்துக்களை நடத்திக் கொண்டுவருகின்ற அரசாங்க அலுவலகங்களிலும், தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்படும். நிர்ணயமான தமிழ்ச் சொற்கள் அடங்கிய பட்டியலும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழக [illegible] தோழர் இரா. நெடு(ஞ்)செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் [illegible]